ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல: PS/GPA/Circular/29/2020
2020.09.15

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணப் பிரதம செயலாளர்களுக்கும்,
அராசங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்/
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்களுக்கும்

**திங்கட்கிழமை தினத்தை "பொதுமக்கள் தினமாக" பிரகடனப்படுத்தல்**

ஒவ்வொரு வாரத்தினதும் திங்கட்கிழமை தினத்தை சகல அரச நிறுவனங்களினதும் "பொதுமக்கள் தினமாக" பெயரிடுவதற்கு 2020 செப்டெம்பர் மாதம் 09 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதால் உடனடியாகச் செயற்படும்வண்ணம் ஒவ்வொரு வாரத்தினதும் திங்கட்கிழமை தினத்தை அனைத்து அரச நிறுவனங்களிலும் பொதுமக்கள் தினமாக செயற்படுத்துவதற்காக தங்களின் கீழ் இருக்கும் அனைத்து நிறுவனங்களையும் அறிவுறுத்தி மக்கள் சேவையினை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்துமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. அரசாங்க நிறுவனங்களுக்கு வருகைதருகின்ற பொதுமக்கள் தொடர்புடைய உத்தியோகத்தர்களை சந்திப்பதற்கும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இயலுமானவகையில் அனைத்து நிறுவனங்களிலும் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் தினமாகிய திங்கட்கிழமை தினத்தன்று தமது அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்பதில் அனைத்து நிறுவனத் தலைவர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை அறியத் தருகின்றேன்.

03. அதேபோன்று பொதுமக்கள் தினத்தில் அத்தியாவசியமானதொரு தேவையை தவிர அனைத்து உத்தியோகத்தர்களும் விடுமுறை பெறுவதைப் போன்று அலுவலகத்திற்கு வெளியில் உள்ள வேறு கடமைகளை புரிவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறியத்தருகின்றேன்.

**ஒப்பம்.∴ பி.பீ.ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்: பிரதமரின் செயலாளர்
அமைச்சரவை செயலாளர்
கணக்காய்வாளர் தலைமையதிபதி

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk